ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2348/22 - 2023 සැප්තැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2023.09.05
*2348/22 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: WGSWD&EIP/ACQ/KB/27.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/10/2014/LRB/198.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பொரலஸ்கமுவை பிரிவெனா வீதிக்கும், கட்டுவாவளை - மகறகமை (பஸ் வீதி இல. 345) வீதிக்கும் இடையில் அமைந்துள்ள வயல் வெளியின் வாய்க்காலை அபிவிருத்தி செய்தல், நீர்த் தடாகங்களை அமைத்தல், நீர்த் தடாக ஒதுக்கங்களை அமைத்தல், நகர அலங்காரப் பணிகள் என்பவற்றிற்கும் கருத்திட்டம் காரணமாக இடம்பெயர நேரிடும் நபர்களை மீளக் குடியமர்த்துவ தற்கும் தேவையான காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 578 - கட்டுவாவளை வடக்கு கிராம அலுவலர் பிரிவில், கட்டுவாவளை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2022.10.26 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521235 (தொகுதி இல. 4, தாள் இல. 2) இல் துண்டு இல. 1, 2, 3, 4, 6, 8 எனக் காட்டப்பட்ட 0.5946 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் :

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர் : மகதெனியே ஓவிட்ட; விபரம் : சதுப்பு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0369 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 2**
காணியின் பெயர் : மகதெனியே ஓவிட்ட; விபரம் : சதுப்பு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0156 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 3**
காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0129 ஹெக்டயார்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

04. **துண்டு இல. 4**
காணியின் பெயர் : மகதெனியே ஓவிட்ட, சமகி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 119 ஐ உடைய காணி; விபரம் : சதுப்பு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : திரு. வஜிர குணசேக்கர, இல. 119, சமகி மாவத்தை, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம் : 0.4380 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 6**
காணியின் பெயர் : கட்டுவாவள மகதெனிய; விபரம் : ஓவிட்ட; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : திரு. புலுக்குட்டிகே தொன் ஹேமா குணவர்தன, இல. 103, கட்டுவாவளை, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம் : 0.0399 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 8**
காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0513 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2023, செத்தெம்பர் 04.

EOG 09 - 0044

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: WGSWD&EIP/ACQ/KB/42.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/10/2017/
LRB/368.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பொதுத் தேவையின் விபரம் : வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பெப்பிலியான, சுனேத்திராதேவி வீதி, இல. 89 இல் அமைந்துள்ள யூரோ ஸ்கேன் (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான காணியின் எல்லை மதிலில் இருந்து CO/DSO/2012/883 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தின் மூலம் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பெப்பிலியான வயல் வெளியில் அமைந்துள்ள காணித் துண்டுகள் வரை, தாழ்நிலக் காணிகளை நீர் ஒதுக்கப் பிரதேசமாகப் பேணிச் செல்லல், கால்வாயை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பிரவேச வீதியை அமைத்தல் ஆகிய பணிகளுக்குத் தேவையான காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் பொரலஸ்கமுவை நகர சபை எல்லைக்குட்பட்ட பெப்பிலியான கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.07.07 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521212 (தொகுதி இல. 2, தாள் இல. 3) இல் துண்டு இல. 2, 6 எனக் காட்டப்பட்ட 0.0253 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் :

01. **துண்டு இல. 2**
காணியின் பெயர் : - ; விபரம் : கால்வாய்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : யூரோ ஸ்கேன் எக்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி, இல. 89, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 07; விஸ்தீரணம் : 0.0216 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 6**
காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : யூரோ ஸ்கேன் எக்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி, இல. 89, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 07; விஸ்தீரணம் : 0.0037 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2023, செத்தெம்பர் 04.

EOG 09 - 0045